| S–4844 |
|---|

| Sub. Code |
|---|
| 22BLT1C1 |

**B.Lit. DEGREE EXAMINATION, NOVEMBER 2024**

**First Semester**

**தமிழ்**

**இக்கால இலக்கியம்**

**(CBCS – 2022 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

**பகுதி அ** $(10 \times 2 = 20)$

பின்வரும் வினாக்களுக்கு ஓரிரு தொடரில் விடைதருக.

1. நிகரற்ற பெருமைக் கொண்ட தாயின் சிறப்பினைப் பாரதி எவ்வாறு பாடுகின்றார்?

2. "குளிர் நறுஞ் சந்தனஞ் சார் பொதிகையில் குளிர்ந்தும்" இவ்வரிகளில் காணப்படும் சூழலை எழுதுக.

3. கண்ணீர்ப்பூக்கள் கவிதைத்தொகுப்பில் நீ அறிந்த கவிதைகளின் பெயர்களை எழுதுக.

4. "மு.மேத்தாவின் கண்ணீர்ப் பூக்கள் கவிதை நூலைக் கையில் வைத்திருப்பதே கௌரவம்" என்றுக் கூறியவர் யார்?

5. 'ஒரு பிரமுகர்' சிறுகதையின் கதைப் பாத்திரங்களை எழுதுக.

6. யுவ புரஸ்கார் விருது வென்றவர் யார்?

7. கு.சின்னப்பப் பாரதியின் குறுநாவல்களின் பெயர்களை எழுதுக.

8. கலையம்சம் கொண்ட படைப்பாக அடையாளம் காட்டப்பட்டது தாகம் எனும் நாவல் என்று கூறியவர் யார்?

9. கொல்லிப்பாவை எந்த இலக்கியத்தின் அடிப்படையில் இயற்றப்பட்டு உள்ளது?

10. கொல்லிப்பாவை ஆசிரியர் பெற்ற விருது எது?

**பகுதி ஆ** $(5 \times 5 = 25)$

பின்வரும் வினாக்களுக்கும் <u>ஒரு பக்க</u> அளவில் விடை தருக.

11. (அ) "எண்ணமுறக் காக்கின்றான்; வாய் முணுத்தல் கண்டறியேன்" என்ற பாரதியின் பாடலில் சேவகன் நிலைக் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) 'எத்தனை பெரிய வானம்' எண்ணிப்பார் உனையும் நீயே என்ற அழகின் சிரிப்பு பாடலின் விளக்கத்தினை விளக்குக.

12. (அ) எதிர்மறைக் கண்ணோட்டத்தில் அமைந்த புதுக்கவிதைகளின் இயல்பினை மு.மேத்தாவின் கவிதை வழி விளக்குக.

(அல்லது)

(ஆ) 'இதயச் செடியின் காணிக்கை' என்ற கண்ணீர்ப்பூக்கள் கவிதையின் கருத்தினை எடுத்துரைக்க.

13. (அ) 'வாழ்தலின்றி வேறு வழியேது' என்பதை உணர்த்தும் சுனில் கிருஷ்ணன் சிறுகதையின் கருத்துக்களை எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) கு.பா.ராஜகோபாலனின் 'விடியுமா' சிறுகதை வழி பெண்ணின் மன உணர்வை சித்தரிக்க.

14. (அ) சுரங்கத் தொழிலாளர்களின் வர்க்கப் போராட்டங்கள் பற்றி சின்னப்பப்பாரதி நாவல் கூறியனவற்றை ஆராய்க.

(அல்லது)

(ஆ) பாட்டாளி வர்க்கத்தின் போர்க்குண முத்திரை குறித்து ஆராய்ந்து எழுதுக.

15. (அ) கொல்லிமலையின் சிறப்புகளை அரிசில்கிழரர் கருத்தோட்டத்தின் வழி விளக்குக.

(அல்லது)

(ஆ) கொல்லிப்பாவையின் இயல்புகளை எடுத்துரைக்க.

**பகுதி இ** $(3 \times 10 = 30)$

எவையேனும் **மூன்று** வினாக்களுக்கு கட்டுரை அளவில் விடை தருக.

16. 'கேட்ட பொழுதில் பொருள் கொடுப்பான்' ..... என்ற பாடலடிகளில் தோழனின் நட்புத் திறத்தை பாரதி கூறியுள்ளனவற்றை ஆராய்க.

17. 'தேசப்பிதாவுக்கு ஒரு தெருப்பாடகனின் அஞ்சலி' எனும் மு.மேத்தா கவிதையின் சிந்தனைச் செய்திகளைத் தொகுத்துரைக்க.

18. 'குழந்தைகளின் உலகில் உயிரற்றப் பொருள்களுக்கு' 'மதிப்புண்டு' 'பாசமுண்டு' என்பதை கி.ரா சிறுகதை வழி எடுத்துரைக்க.

19. பாட்டாளி வர்க்கத்தினர் வறுமைச் சித்தரிப்பினைச் 'சுரங்கம்' நாவல் வழி விளக்குக.

20. கொல்லிப்பாவையில் வல்வில் ஓரியின் வீரத்தினை விளக்கி வரைக.

---

| S–4845 |
|---|

| Sub. Code |
|---|
| 22BLT1C2 |

**B.Lit. DEGREE EXAMINATION, NOVEMBER 2024**

**First Semester**

**தமிழ்**

**நன்னூல் எழுத்தும் யாப்பருங்கலக்காரிகையும்**

**(CBCS – 2022 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

பகுதி அ $(10 \times 2 = 20)$

**அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

1. மூவகை நூல்களை எழுதுக.

2. எழுத்திலக்கணத்தின் பகுதிகள் எத்தனை?

3. பகுபத உறுப்புகளை எழுதுக.

4. பூப்பெயர் புணர்ச்சி விதியினைச் சுட்டுக.

5. கீழின் முன் வன்மை விகற்பம் – கூறுக.

6. நேரசை பற்றி எழுதுக.

7. இறுதி எழுத்தோ, சீரோ ஒன்ற வரும் தொடை எது?

8. அகவற்பாவின் ஓசை யாது?

9. முரண் தொடை என்றால் என்ன?

10. வஞ்சிப்பாவின் வகைகள் எத்தனை?

**பகுதி ஆ** (5 × 5 = 25)

பின்வரும் வினாக்களுக்கு ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) எழுவகை மதம், பத்துக் குற்றங்களை விளக்குக.

(அல்லது)

(ஆ) எழுத்து என்றால் என்ன? அதன் பெயர்களை விவரிக்க.

12. (அ) பண்புப் பெயர்ப் புணர்ச்சியினை விவரிக்க.

(அல்லது)

(ஆ) இகர ஈற்றுச் சிறப்பு விதியினை விவரிக்க.

13. (அ) மகர ஈற்றுப் புணர்ச்சியினை விளக்குக.

(அல்லது)

(ஆ) எல்லாம், எல்லீரும் புணருமாற்றை விவரிக்க.

14. (அ) அசைகளின் இலக்கணங்களை எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) தளை பற்றி விளக்கி எழுதுக.

15. (அ) வெண்பா பற்றி விவரிக்க.

(அல்லது)

(ஆ) வஞ்சிப்பா பற்றி விளக்குக.

**பகுதி இ** (3 × 10 = 30)

எவையேனும் **மூன்றனுக்குக்** கட்டுரை வடிவில் விடை எழுதுக.

16. பத்தழகு, பத்துக் குற்றம் குறித்துக் கட்டுரைக்க.

17. முதல் சார்பெழுத்துகள் பற்றிக் கட்டுரைக்க.

18. மெய்யீற்றில் மகர, வகர ஈறு புணருமாற்றைக் குறிப்பிடுக.

19. அசைக்கு உறுப்பாகும் எழுத்துகளைப் பற்றி விரிவாக எழுதுக.

20. ஆசிரியப்பா பற்றி விரிவாக எழுதுக.

———————

| S–4846 |
|---|

| Sub. Code |
|---|
| 22BLT3C2 |

**B.Lit. DEGREE EXAMINATION, NOVEMBER 2024**

**Third Semester**

**தமிழ்**

**நம்பியகப் பொருளும் புறப்பொருள் வெண்பாமாலையும்**

**(CBCS – 2022 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

**பகுதி அ** $(10 \times 2 = 20)$

**அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்க.

1. கைக்கிளைக்குரிய தலைமக்கள் யாவர்?

2. உரிப்பொருள் எனப்டுவது யாது?

3. கைகோள் என்றால் என்ன? அதன் வகைகளை எழுதுக.

4. கற்பில் நிகழும் பிரிவின் வகைகள் யாவை?

5. வெட்சி அரவம் என்றால் என்ன?

6. நிரை மீட்டல் என்றால் என்ன?

7. வட்கார்மேல் செல்வது என்பது எத்திணை?

8. காஞ்சித்திணைக்குரிய துறைகள் எத்தனை?

9. போர்க்களத்து மிக்கோர் செருவென்றது என்பது எத்திணை?

10. பாடாண் திணை எனப்படுவது யாது?

**பகுதி ஆ** $(5 \times 5 = 25)$

**அனைத்து** வினாக்களுக்கும் ஓரிரு பக்க அளவில் விடையளிக்க.

11. (அ) அன்பின் ஐந்திணைக்குரிய முதற்பொருளினை எழுதுக.

(அல்லது)

(ஆ) களவுக்காலப் பிரிவின் வகைகளை எழுதி விளக்குக.

12. (அ) எண்வகை மணங்களை விவரி.

(அல்லது)

(ஆ) களவிற்குரிய கிளவித் தொகையினை எழுதுக.

13. (அ) உடன்போக்கின் வகை விரிகளை விளக்குக.

(அல்லது)

(ஆ) இரவுக்குறியின் வகைகளை விளக்குக.

14. (அ) உழபுலவஞ்சி, மழபுலவஞ்சி – வேறுபடுத்துக.

(அல்லது)

(ஆ) உழிஞைத் திணையின் துறைகளில் ஐந்தினை விளக்குக.

15. (அ) ஆளெறிப்பிள்ளை, பிள்ளைத் தெளிவு ஆகிய துறைகளை விளக்குக.

(அல்லது)

(ஆ) செவியறிவுறூஉ, ஓம்படை ஆகிய துறைகளுக்கு விளக்கம் தருக.

**பகுதி இ** $(3 \times 10 = 30)$

எவையேனும் **மூன்றனுக்கு** விரிவான விடையளிக்க.

16. குறிஞ்சி, பாலை ஆகிய திணைகளுக்குரிய கருப்பொருள்களை எழுதுக.

17. "அறத்தொடு நிற்றல்" என்பதை அகப்பொருள் வழி விவரி.

18. வெட்சித் திணையின் துறைகளை எழுதி விளக்குக.

19. வாகைத் திணையின் துறைகளை எழுதி, ஐந்திணை விவரி.

20. இடைநிலை, குடைமங்கலம், பரிசில் துறை, பரிசில் நிலை, பரிசில் விடை ஆகிய துறைகளை விவரி.

———————

**S–4847**

| Sub. Code |
|---|
| 22BLT4C1 |

**B.Lit. DEGREE EXAMINATION, NOVEMBER 2024**

**Fourth Semester**

**தமிழ்**

**காப்பிய இலக்கியம்**

**(CBCS – 2022 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

**பகுதி அ** $(10 \times 2 = 20)$

**அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

1. இரட்டைக் காப்பியங்கள் எவை?
2. மணிமேகலையின் உட்பிரிவுன் பெயர் என்ன?
3. கம்பர் தம் இயற்றிய நூலுக்கு வைத்த பெயர்?
4. கம்பராமாயணம் எத்தனை காண்டங்களை உடையது?
5. சைவத் திருமுறைகளின் எண்ணிக்கை?
6. பெரிய புராணத்திற்கு மூல நூல்களானவை?
7. வீரமாமுனிவர் இயற்றிய இலக்கன நூலின் பெயர்?
8. தேம்பாவணியின் காப்பிய நாயகன் பெயர்?
9. சீறாப்புராணத்தை இயற்றியவர் யார்?
10. சீதக்காதி வள்ளல் - யார்?

**பகுதி ஆ** (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

11. (அ) மணிமேகலை குறிப்பு வரைக.

(அல்லது)

(ஆ) ஆபுத்திரனின் அருள் செயல்களை விவரிக்க.

12. (அ) கம்பராமாயணம் குறிப்பு வரைக.

(அல்லது)

(ஆ) அனுமன் கடல் தாவிய போது ஏற்பட்ட இயற்கை மாற்றங்களை எடுத்துரைக்க.

13. (அ) சேக்கிழார் - குறிப்பு வரைக.

(அல்லது)

(ஆ) பூசலார் எழுப்பிய மனக் கோயில் பற்றி விவரிக்க.

14. (அ) வீரமா முனிவரின் தமிழ்ப் பணிகளை எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) குழந்தையை மீண்டும் கண்ட மனநிலைகளை எடுத்துரைக்க.

15. (அ) உமறுப்புலவர் - சிறு குறிப்பு வரைக.

(அல்லது)

(ஆ) நகரை விட்டுக் கிளம்பியோர் கண்ட காட்சிகள் பற்றி எடுத்துரைக்க.

**பகுதி இ** (3 × 10 = 30)

எவையேனும் **மூன்றனுக்கு** விரிவான விடையளிக்கவும்.

16. பாத்திர மரபு கூறிய காதை வழி ஆபுத்திரத்தினின் அரிய செயல்களை விளக்கி வரைக.

17. மகேந்திர மலையிலிருந்து புறப்பட்ட அனுமன் நிலை, இயற்கை மாற்றங்கள் பற்றி விரிவாக எழுதுக.

18. பூசலாரின் மனக்கோவில், மன்னனின் மன்கோவில் கனவில் இறைவன் ஆகிய மூன்றினைப் பற்றி விளக்கமாக எழுதுக.

19. தேம்பாவணியில் இறைமகனைப் பிரிந்து அலைந்த பெற்றோர் நிலை மீண்டு கண்ட திறங்களைப் பற்றி விளக்குக.

20. கதீஜா கண்ட கனவினைப் பற்றி விவரிக்க.

| S–4848 |
|---|

| Sub. Code |
|---|
| 22BLT4C2 |

**B.Lit. DEGREE EXAMINATION, NOVEMBER 2024**

**Fourth Semester**

**தமிழ்**

**தொல்காப்பியம் — எழுத்ததிகாரம் இளம்பூரணம்**

**(CBCS – 2022 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

**பகுதி அ** $(10 \times 2 = 20)$

**அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

1. முப்பது எழுத்துகள் என்பவை யாவை?

2. மூன்று சார்பெழுத்துகளைச் சுட்டுக?

3. 'வல்லா றூர்ந்தே' எனச் சுட்டப் பெறுவது எது?

4. 'உந்தி' என்பதன் பொருள் யாது?

5. மெய்யீறெல்லாம் —————— நிலையல் - கோடிட்ட இடத்தை நிரப்புக?

6. 'யவமுன் வரினே வகர மொற்றும்' - விளக்குக?

7. 'ஆண்மரக் கிளவி யரைமர வியற்றே' - சான்று தருக?

8. ஈரெழுத் தொரு மொழி - உதாரணம் தருக?

9. மரப்பெயர்ச் சொல் பெறும் சாரியை என்ன?

10. வன்தொடர்க் குற்றியலுகரத்திற்குச் சான்று தருக?

## பகுதி ஆ $(5 \times 5 = 25)$

**அனைத்து** வினாக்களுக்கும் ஓரிரு பக்க அளவில் விடையளிக்கவும்.

11. (அ) எழுத்துகளின் எண்ணிக்கை, பெயர்கள், வடிவம் பற்றி நூன்மரபு வழி விளக்குக?

(அல்லது)

(ஆ) எழுத்து என்றால் என்ன? அதன் பொதுப் பிறப்பினை விவரிக்க?

12. (அ) சொற்கள் புணருமாற்றை விவரிக்க?

(அல்லது)

(ஆ) அகர ஈறு புணரும் இயல்புகளை எடுத்துரைக்க?

13. (அ) ணகர ஈறு புணருமாற்றை எடுத்துக் கூறுக?

(அல்லது)

(ஆ) நகர ஈற்றின் புணர்ச்சியினை எடுத்துக் காட்டுத் தந்து விளக்குக?

14. (அ) ஆகார ஈறு புணரும் இயல்புகளை விவரிக்க?

(அல்லது)

(ஆ) எழுத்துச் சாரியைகள் - குறிப்பு வரைக?

15. (அ) குற்றியலுகர வகைகளை விவரிக்க?

(அல்லது)

(ஆ) திசைப் பெயர்கள் புணருமாற்றை விளக்குக?

## பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் **மூன்றனுக்கு** விரிவான விடையளிக்க.

16. எழுத்து குறித்த நூன்மரபு கூறும் கருத்துகளை விரிவாக விளக்குக?

17. வேற்றுமைப் புணர்ச்சியினை விளக்கி அவை பெறும் சாரியைகள் திரிபுகள் பற்றி விரிவாக எழுதுக?

18. ஆகார ஈறு புணரும் முறை பற்றி விளக்கமாக எடுத்துரைக்க?

19. மகர ஈற்றுப் புணரும் இயல்புகளை விரிவாகச் சான்றுகளுடன் கூறுக?

20. எண்ணுப் பெயர்கள் குறித்து விரிவாக எடுத்துக் கூறுக?

———————

| S–4849 |
|---|

| Sub. Code |
|---|
| 22BLT4C3 |

**B.Lit. DEGREE EXAMINATION, NOVEMBER 2024**

**Fourth Semester**

தமிழ்

சிலப்பதிகாரம் – புகார்க் காண்டம்

**(CBCS – 2022 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

பகுதி அ $(10 \times 2 = 20)$

**அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

1. கண்ணகியின் அகவை (மங்கல வாழ்த்துப் பாடலில்) என்ன?

2. யானை எருத்தம் - அடிக்கோடிட்ட சொல்லின் பொருள் யாது?

3. சித்திராபதியின் மகள் பெயர்?

4. ஐவகை மன்றங்களை எழுதுக.

5. தேவபாணி என்பது யாது?

6. புலவாய் என்னும் சொல்லின் பொருள் யாது?

7. நெடியோன் குன்றம் என்றால் என்ன?

8. குழந்தையாக உருமாற்றம் அடைந்தவன் யார்?

9. ‘மதுரை மூதூர் யாது?’ எனக் கேட்டவர் யார்?

10. “முள்ளுடைக் காட்டில் முது நரி ஆகுக” என்றவள் யார்?

## பகுதி ஆ (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடையளிக்கவும்.

11. (அ) கோவலன் கண்ணகி இருவரின் இயல்புகளை மங்கல வாழ்த்துப் பாடல் வழி விளக்குக.

(அல்லது)

(ஆ) மனையறம் படுத்த காதையில் 'வண்டொடு புக்க மணவாய்த் தென்றல்' பற்றி விவரிக்க.

12. (அ) ஆடல், இசை, நாடகத் தன்மைகளை (அரங்கேற்று காதை - நின்று) எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) கூடியிருந்தோரை மாலைப் போது எவ்வாறு இன்புறச் செய்த தென்பதை விளக்குக.

13. (அ) இந்திர விழாவின் இயல்புகளை எடுத்தியம்புக.

(அல்லது)

(ஆ) கடலாடு காதையில் விஞ்ஞையர்களின் நிலைகளை விளக்குக.

14. (அ) கானல் வரி பாடிய கோவலன் திறத்தினைக் கூறுக.

(அல்லது)

(ஆ) வேனிற் காதையில் மாதவி பாடிய செம்பாலை பற்றி விளக்குக.

15. (அ) தேவந்தியின் தேறுதல் மொழிகள் யாவை?

(அல்லது)

(ஆ) உழவரின் உயர்வாக நாடுகாண் காதை கூறுவன யாவை?

## பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் **மூன்றனுக்கு** விரிவான விடையெழுதுக.

16. இயற்கையை வாழ்த்தும் மங்கல வாழ்த்தினை விளக்கி இருவரின திருமண விழவினை விளக்குக.

17. அரங்கேற்று காதையில் இடம்பெறும் நாடகக் கூறுகளை எடுத்துரைக்க.

18. கடலாடு காதை குறித்த செய்திகளை விளக்குக.

19. கோவலன் - மாதவி இசைத்த கானல்வரிப் பாடல் குறித்து எடுத்துரைக்க.

20. கோவலன் - கவுந்தியடிகள் இருவரின் உரையாடலினை விளக்கி வரைக.

**S–4850**

| Sub. Code |
|---|
| 22BLTA4 |

**B.Lit. DEGREE EXAMINATION, NOVEMBER 2024**

**தமிழ்**

**இயைபுப்பாடம் - கல்வெட்டியல்**

**(CBCS – 2022 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

**பகுதி அ** $(10 \times 2 = 20)$

**அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்க.

1. அசோகர் காலத்தில் கல்வெட்டில் பயன்படுத்திய எழுத்து எது?

2. பிராமியின் வரிவடிவ மாற்றமே இந்த எழுத்து ஆகும்?

3. புகளூர்க் கல்வெட்டு மூவேந்தர்களில் யாரைச் சுட்டுகிறது?

4. ஓம்படைக் கிளவி என்றால் என்ன?

5. மெய்க்கீர்த்தி என்பது யாது?

6. சித்தன்னவாசல் கல்வெட்டு உள்ள ஊர் எது?

7. ‘மாபாரதம் தமிழ்ப் படுத்தும்’ எனக் கூறும் செப்பேடு எது?

8. நடுகல் பற்றி கூறும் இலக்கண நூல் எது?

9. நடுகல் குறித்து தனிக்காதை கூறும் நூல் எது?

10. சிக்மகலூர் செப்பேட்டின் மொழி யாது?

பகுதி ஆ $(5 \times 5 = 25)$

**அனைத்து** வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடையளிக்க.

11. (அ) பிராமி பற்றி விவரிக்க.

(அல்லது)

(ஆ) தமிழ் பிராமி எழுத்துகளை விளக்குக.

12. (அ) நடுகல் குறிப்பு வரைக.

(அல்லது)

(ஆ) கிரந்த எழுத்துப் பற்றி விவரிக்க.

13. (அ) கல்வெட்டு பற்றி விரிவான கட்டுரைக்க.

(அல்லது)

(ஆ) கல்வெட்டு ஆய்வுகளைப் பற்றி விரிவான விடையளிக்க.

14. (அ) உருவ எழுத்தினைப் பற்றி எழுதுக.

(அல்லது)

(ஆ) எழுத்துக் கலை குறித்து விவரிக்க.

15. (அ) செப்பேடுகள் - குறிப்பு வரைக.

(அல்லது)

(ஆ) பிராகிருத மொழிச் செப்பேடுகள் குறித்து விவரிக்க.

## பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் **மூன்றனுக்கு** விரிவான அளவில் விடை எழுதுக.

16. தமிழ் எழுத்துகளின் தோற்றமும் வளர்ச்சியும் குறித்து விவரிக்க.

17. மெய்க்கீர்த்தி பற்றிக் கட்டுரைக்க.

18. கல்வெட்டுகளின் அமைப்பினைக் குறித்து விவரிக்க.

19. பாண்டியர் காலச் செப்பேடுகள் பற்றி விவரிக்க.

20. பல்லவர் காலச் செப்பேடுகள் பற்றி விளக்கி எழுதுக.

———————

| S–4851 |
|---|

| Sub. Code |
|---|
| 22NME4D |

**B.Lit. DEGREE EXAMINATION, NOVEMBER 2024**

**Fourth Semester**

**தமிழ்**

**கோயிற்கலை**

**(CBCS – 2022 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

**பகுதி அ** $(10 \times 2 = 20)$

**அனைத்து** வினாக்களுக்கும் ஓரிரு தொடர்களில் விடை தருக.

1. சங்ககால இசைக்கருவிகளுக்கு எடுத்துக்காட்டு தருக.

2. வரிப் பாடல்களின் வகைகளை எழுதுக.

3. கோயில் கட்டிடத்தில் காணப்படும் உறுப்புக்கள் எத்தனை? அவையாவை?

4. தஞ்சைப் பெரிய கோவிலைக் கட்டியவன் யார்?

5. சிற்பம் அமைக்கத் தேவைப்படும் பொருள்கள் யாவை?

6. கற்சிப்பங்களுக்கு எடுத்துக்காட்டு தருக.

7. செப்புத்திருமேனி என்றால் என்ன?

8. ஆட வல்லான் என்னும் செப்புத்திருமேனிக் குரியவர் யார்?

9. விஜய நகரர் கால ஓவியம் காணப்படும் இடங்களை எழுதுக.

10. சுவர் ஓவியம்-பொருள் விளக்கம் தருக?

## பகுதி ஆ (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் ஒருபக்க அளவில் விடை தருக.

11. (அ) சங்ககால கட்டக்கலை குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) சங்ககால சிற்பக்கலைகள் தரும் கருத்துக்ககளைக் குறிப்பிடுக.

12. (அ) குடைவரைக் கோயில்கள் குறித்து விளக்குக.

(அல்லது)

(ஆ) கங்கை கொண்ட சோழபுரம்-குறிப்பு வரைக.

13. (அ) கற் சிற்பங்கள் குறித்த செய்திகளை விவரி.

(அல்லது)

(ஆ) இரண்டு வகையான சிற்பங்களை விளக்குக.

14. (அ) இராஜ ராஜன் காலத்து செப்புத்திருமேனி குறித்த கல்வெட்டு செய்திகளைச் சுருக்கி எழுதுக.

(அல்லது)

(ஆ) செப்புத்திருமேனியில் தேன் மெழுக்கு முறையைக் குறித்து எழுதுக.

15. (அ) சித்தனவாசல் குறித்து விளக்குக.

(அல்லது)

(ஆ) பாண்டியர் கால ஓவியங்களை விளக்குக.

## பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் **மூன்று** வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தருக.

16. தமிழ்நாட்டுக் கோயில்கள் குறித்து நீவிர் அறிவனவற்றை தொகுத்துரைக்க.

17. பல்லவர் கால பல்வகையான கோயில் அமைப்பு குறித்து ஆராய்க.

18. தமிழ்நாட்டுச் சிற்பங்கள் குறித்து எடுத்துரைக்க.

19. செப்புத் திருமேனிகள் குறித்து கருத்துகளைத் தொகுத்துரைக்க.

20. பல்லவர் கால ஓவியம் பற்றிய கருத்தை புலப்படுத்துக.

———————

| S–4852 |
|---|

| Sub. Code |
|---|
| 22BLT5C1 |

**B.Lit. DEGREE EXAMINATION, NOVEMBER 2024**

**Fifth Semester**

**தமிழ்**

**சிற்றிலக்கியம்**

**(CBCS – 2022 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

**பகுதி அ** (10 × 2 = 20)

**அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

1. தமிழ்விடுதூது - குறிப்பு வரைக.

2. தமிழ்விடு தூது கூறும் பொருள்கள் யாவை?

3. சேக்கிழார் கூறும் மனுநீதி கண்ட புராணக் கருத்து என்ன?

4. சேக்கிழார் வழி காரி நாயனாரின் சிறப்புகளைக் குறிப்பிடுக.

5. உலா என்றால் என்ன?

6. விக்கிரம சோழன் உலா குறிப்பு வரைக.

7. பரணி என்றால் என்ன?

8. கலிங்கத்துப் பரணியில் காட்டின் இயல்பாகக் கூறும் கருத்துக்கள் யாவை?

9. கலம்பகம் என்றால் என்ன?

10. நந்திக்கலம்பகம் - குறிப்பு வரைக.

பகுதி ஆ (5 × 5 = 25)

**அனைத்து** விளாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடையளிக்கவும்.

11. (அ) தமிழ்விடு தூது கூறும் எழுத்துக்களின் வகைகளை விளக்குக.

(அல்லது)

(ஆ) தமிழ்விடு தூது வழி இலக்கியங்களின் சிறப்பியல்புகளை எடுத்துரைக்க.

12. (அ) சேக்கிழார் பிள்ளைத் தமிழின் சிறப்புகளை விளக்குக.

(அல்லது)

(ஆ) சேக்கிழார் பிள்ளைத் தமிழின் செங்கீரைப் பருவக் கருத்துக்களைச் சுருக்கமாக எடுத்துரைக்க.

13. (அ) விக்கிரம சோழன் உலாவின் அமைப்பினை விளக்குக.

(அல்லது)

(ஆ) விக்கிரம சோழன் உலாவில் கலிங்கப் போர் பற்றிய கருத்துக்களை எடுத்துரைக்க.

14. (அ) கலிங்கத்துப்பரணியில் நிலத்தின் வெம்மை பற்றி விளக்குக.

(அல்லது)

(ஆ) கலிங்கத்துப்பரணியில் 'பனிநீரும் மழைநீரும் வியர்வை நீரே' என்ற கூற்றைக் தெளிவுபடுத்துக.

15. (அ) நந்திகலம்பகத்தின் மரபு வழி வரலாறு பற்றி எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) நந்திக் கலம்பகத்தின் உறுப்புகள் யாவை? விளக்குக.

பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் **மூன்றனுக்கு** விடையளிக்கவும்.

16. தமிழ்விடு தூதின் சிறப்புகளை விவரிக்க.

17. சேக்கிழார் பிள்ளைத்தமிழின் தாலப் பருவக் கருத்துக்களை வரைக.

18. விக்கிரம சோழன் உலாவின் தனித்தன்மைகளை எடுத்தியம்புக.

19. கலிங்கத்துப்பரணியில் காடுபாடியது பகுதியில் அமைந்துள்ள கருத்துக்களைத் தெளிவுபடுத்துக.

20. அழகப்பர் அந்தாதியின் சிறப்பியல்புகளைக் கட்டுரைக்க.

———————

| S–4853 |
|---|

| Sub. Code |
|---|
| 22BLT5C2 |

**B.Lit. DEGREE EXAMINATION, NOVEMBER 2024**

**Fifth Semester**

**தமிழ்**

**தொல்காப்பியம் – சொல்லதிகாரம் – சேனாவரையம்**

**(CBCS – 2022 onwards)**

Time : 3 Hours                                Maximum : 75 Marks

**பகுதி அ**                $(10 \times 2 = 20)$

**அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

1. செப்பும் வினாவும் குறித்துத் தொல்காப்பியர் உரைப்பது யாது?

2. அறியாப் பொருளிடத்து வினாவாய்த் தோன்றும் சொற்கள் யாவை?

3. வேற்றுமையின் பெயர் முறையை எழுதுக.

4. உயர்திணைப் பெயருள் விளிகொள்ளும் பெயர் ஈறுகள் யாவை?

5. தடுமாறு பொருளில் மயங்கும் உருபுகள் யாவை?

6. அம்ம என்னும் இடைச் சொல் எப்பொருளில் வரும்?

7. மொழி புணர் இயல்பின் நான்கு வகைகளைச் சுட்டுக.

8. இரத்தல் கிளவி என்றால் என்ன?

9. முன்னிலை அசைச் சொற்கள் யாவை?

10. எச்சவியலில் வழக்கினத்து ஒழிப என்பவை யாவை?

## பகுதி ஆ $(5 \times 5 = 25)$

**அனைத்து** வினாக்களுக்கும் ஓரிரு பக்க அளவில் விடையளிக்க.

11. (அ) வண்ணச் சினைச்சொல் என்றால் என்ன?

(அல்லது)

(ஆ) செப்பும் வினாவும் குறித்துத் தொல்காப்பியர் உரைப்பன யாவை?

12. (அ) ஓம்படை கிளவிக்கு உருபுகள் மயங்கும் முறையை எழுதுக.

(அல்லது)

(ஆ) மூன்றாம் வேற்றுமைப் பொருள்களைச் சுட்டியுரைக்க.

13. (அ) வினையெச்ச வாய்ப்பாடுகளை விளக்கி எழுதுக.

(அல்லது)

(ஆ) விரவுப் பெயர் வகை குறித்து எழுதுக.

14. (அ) அசை நிலைகளை விளக்குக.

(அல்லது)

(ஆ) எண்ணிடைச் சொற்கள் குறித்து தொல்காப்பியரின் கருத்துக்களை எழுதுக.

15. (அ) உறிச்சொல்லின் பொது இலக்கணம் யாது?

(அல்லது)

(ஆ) செய்யுளில் எடுத்தாளப்படும் நால்வகைச் சொற்களை விளக்குக.

## பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் **மூன்றனுக்கு** விரிவான விடையளிக்க.

16. கிளவியாக்கச் செய்திகளை தொகுத்துத் தருக.

17. இரண்டாம் வேற்றுமைப் பொருட்பாகுபாடுகள் யாவை? விளக்குக.

18. விளிமரபு செய்திகளைத் தொகுத்து எழுதுக.

19. இடைச்சொற்கள் குறித்துத் தொல்காப்பியர் கூறுவன யாவை?

20. பொருள்கோள் என்றால் என்ன? வகைகளைச் சான்றுடன் விளக்குக.

———————

| S–4854 |
|---|

| Sub. Code |
|---|
| 22BLT5C3 |

**B.Lit. DEGREE EXAMINATION, NOVEMBER 2024**

**Fifth Semester**

**தமிழ்**

**சிலப்பதிகாரம் – மதுரைக்காண்டம்**

**(CBCS – 2022 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

**பகுதி அ** $(10 \times 2 = 20)$

**அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

1. சிலப்பதிகாரத்தை இயற்றியவர் யார்? எச்சமயம் சார்ந்தகாப்பியம்?

2. "இவளோகொங்கச் செல்வி: குடமலையாட்டி
   தேன்தமிழ்ப் பாவைசெய்தவக் கொழுந்து" - பொருள் எழுதுக.

3. கோவலனின் சிறப்பாகமாடலன் கூறியவை யாவை?

4. ஊர்காண் காதையில் காணலாகும் வீதிகளை எழுதுக.

5. மாதரி கண்ட தீயநிமித்தங்கள் யாவை?

6. "கள்வனோ அல்லன்: கருங்கயற்கண் மாதராய்!
   ஒள்ளெரி உண்ணும் இவ்வூர்" - விளக்கம் தருக.

7. "எள்ளறுசிறப்பின் இமையவர் வியப்பப்
   புள்ளுறுபுன்கண் தீர்த்தோன்" – யார்?

8. கண்ணகி தீக்கடவுளிம் யாரையெல்லாம் கைவிடுக என்றால்?

9. மதுரையை விட்டு நீங்கிய பூதங்கள் எவை?

10. கோவலன் பழம் பிறப்பில் எப்பெயர் கொண்டவன்?

## பகுதி ஆ $(5 \times 5 = 25)$

**அனைத்து** வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) மாங்காட்டு மறையவன் பாண்டியனை வாழ்த்திய விதத்தினை எழுதுக.

(அல்லது)

(ஆ) கண்ணகி பற்றி கொற்றவை தெய்வம் ஏறியசாலினி கூறிய செய்திகளை விவரி.

12. (அ) இளங்கோவடிகள் குறிப்பிடும் மதுரையின் சிறப்புகளை 'ஊர்காண் காதை' வழி எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) கண்ணகி தன் கணவனுக்கு உணவு படைத்தபோது நடந்த உரையாடல் பற்றி எழுதுக.

13. (அ) ஆயர்கள் கண்ட தீய நிமித்தங்கள் குறித்த செய்திகளை வரையறுக்க.

(அல்லது)

(ஆ) கண்ணகிக்கு ஏற்பட்ட துன்பத்தினை 'துன்பமாலை' பகுதி கொண்டு எழுதுக.

14. (அ) பாண்டி மாதேவி கண்ட தீக் கனவை அரசனிடம் உரைத்த விதம் யாது?

(அல்லது)

(ஆ) கண்ணகி கூறிய வஞ்சின செய்திகளை 'வஞ்சினமாலை' கொண்டு விளக்குக.

15. (அ) மதுராபதி தெய்வம் கண்ணகிக்குக் கூறிய செய்திகளைச் சுட்டுக.

(அல்லது)

(ஆ) கோவலன் கண்ணகியின் முற்பிறப்புச் செய்திகளை 'கட்டுரை காதை' வழி நின்று எழுதுக.

**பகுதி இ** $(3 \times 10 = 30)$

ஏதேனும் **மூன்றனுக்கு** விரிவான விடையளிக்க.

16. 'புறம்சேரி இறுத்த காதை' செய்திகளைத் தொகுத்தெழுதுக.

17. கோவலனின் நன்றியுணர்வையும் கொடைத்தன்மையையும் 'அடைக்கலக் காதை' வழிப் புலப்படுத்துக.

18. 'ஊழ்சூழ் வரி' - என்னும் தலைப்பில் கட்டுரைக்க.

19. பாண்டிய மன்னனிடம் கண்ணகி வழக்காடி விதத்தினை விவரிக்க.

20. 'கட்டுரை காதை' வெளிப்படுத்தும் செய்திகளைப் பட்டியலிடுக.

| S–4855 |
|---|

| Sub. Code |
|---|
| 22BLT5C4 |

**B.Lit. DEGREE EXAMINATION, NOVEMBER 2024**

**Fifth Semester**

**தமிழ்**

**இலக்கியத் திறனாய்வியல்**

**(CBCS – 2022 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

**பகுதி அ** $(10 \times 2 = 20)$

**அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்க.

1. இலக்கியக்கொள்கைகள் எவற்றை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்படுகின்றன?

2. விளக்கமுறைத் திறனாய்வின் தந்தை என்றழைக்கப்படுபவர் யார்?

3. மருமக்கள் வழி மான்மியம் என்னும் நூலின் ஆசிரியர் யார்? அது எவ்வகை இலக்கியம்?

4. தொல்காப்பியம் குறிப்பிடும் மெய்ப்பாடுகளைக் குறிப்பிடுக.

5. Criticism என்ற ஆங்கிலச்சொல் எம்மொழியில் இருந்து தோன்றியது? திறனாய்வு என்ற சொல்லை வழக்கத்திற்குக் கொண்டு வந்தவர் யார்?

6. சிறுகதை அமைப்பு குறித்து எட்வர்டு ஆலன்போ குறிப்பிடுவது யாது?

7. உரையாசிரியரிடம் அமைந்திருக்கும் திறனாய்வை எவ்வாறு அழைப்பர்?

8. தமிழில் தோன்றிய முதல் செய்யுள் நாடகம் எது? அதன் ஆசிரியர் யார்?

9. முழுநிலை மாந்தர், ஒருநிலை மாந்தர் - என்பதற்கு விளக்கம் தருக.

10. ஸ்டீவன்சன் குறிப்பிடும் மூன்று வகையான சிறுகதைகளைக் குறிப்பிடுக.

## பகுதி ஆ $(5 \times 5 = 25)$

**அனைத்து** வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடையளிக்க.

11. (அ) உரையாசிரியர்கள் திறனாய்வுக்கு ஆற்றிய தொண்டினை விவரி.

(அல்லது)

(ஆ) திறனாய்விற்கு அறிஞர்கள் தரும் விளக்கங்கள் யாவை?

12. (அ) இலக்கியமும் வாழ்க்கையும் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) தொல்காப்பியர் குறிப்பிடும் இலக்கிய உணர்ச்சிகளை விவரிக்க.

13. (அ) வின்செஸ்டர் குறிப்பிடும் மூவகைக் கற்பனைகளை இயம்புக.

(அல்லது)

(ஆ) உண்மையியலும் குறிக்கோளியலும் குறித்து எழுதுக.

14. (அ) இலக்கியத்திற்கும் இயற்கைக்கும் உள்ள தொடர்பினை விவரி.

(அல்லது)

(ஆ) புதினத்திற்கும் சிறுகதைக்கும் உரிய வேறுபாட்டை எழுதுக.

15. (அ) கவிதையின் இருவகைகளை எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) கதை பொதிபாட்டு, நாடகப்பாட்டு ஆகியவற்றை விளக்குக.

**பகுதி இ** $(3 \times 10 = 30)$

எவையேனும் **மூன்றனுக்கு** விரிவான விடையளிக்க.

16. திறனாய்வு வகைகளைத் தொகுத்து எழுதுக.

17. இலக்கியம் தோன்றுவதற்குரிய துடிப்புகளைப் புலப்படுத்துக.

18. கவிதையின் கூறுகளை விளக்கிக் கட்டுரைக்க.

19. இக்கால இலக்கியங்களில் சிறுகதை பெறும் இடம் குறித்து விவரி.

20. கதையும், கதைக்கோப்பும் குறித்து விளக்கி வரைக.

———————

**S–4856**

**Sub. Code**
**22BLT5C5**

**B.Lit. DEGREE EXAMINATION, NOVEMBER 2024**

**Fifth Semester**

**தமிழ்**

**இக்கால மொழியியல்**

**(CBCS – 2022 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

**பகுதி அ** ($10 \times 2 = 20$)

**அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

1. மொழியியல் என்றால் என்ன?

2. உயிரொலிகள் - வரையறு.

3. ஒலியியல் என்றால் என்ன?

4. ஒலி உறழ்ச்சி - குறிப்புத் தருக.

5. அசை என்றால் என்ன?

6. சேர்க்கை உருபனுக்கு எடுத்துக்காட்டுத் தருக.

7. கூட்டுவினைகள் என்றால் என்ன?

8. மீட்டுருவாக்கம் - விளக்கம் தருக.

9. மொழிகள் கடன் வாங்குதல் - குறிப்புத் தருக.

10. சமுதாய மொழியியல் - பொருள் தருக.

## பகுதி ஆ (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடையளிக்கவும்.

11. (அ) மொழியும் இலக்கியமும் பற்றி எழுதுக.

(அல்லது)

(ஆ) ஒலியுறுப்புகள் பற்றி விளக்குக.

12. (அ) ஒலியன் கோட்பாடுகளை விவரி.

(அல்லது)

(ஆ) ஒலியன் அசைகள் குறித்து எழுதுக.

13. (அ) உருபன் கொள்கைகளை விளக்குக.

(அல்லது)

(ஆ) உருபன் வகைகளை சான்றுடன் விவரி.

14. (அ) கூட்டுவினைகளின் வகைகளை எடுத்துக்காட்டுடன் தருக.

(அல்லது)

(ஆ) ஒப்பியல் மீட்டுருவாக்கம் விளக்கி வரைக.

15. (அ) மொழி கற்பித்தலில் ஏற்படும் சிக்கல்கள் குறித்தெழுதுக.

(அல்லது)

(ஆ) சொற்களைக் கடன்பெறுவதற்கான சூழல்கள் பற்றி விளக்குக.

## பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் **மூன்றனுக்கு** விரிவான விடையளிக்க.

16. உயிரொலிகளை எடுத்துக்காட்டுடன் விவரி.

17. உருபன் வகைகளை தொகுத்தெழுதுக.

18. வினைச்சொற்கள் என்றால் என்ன? அவற்றை சான்றுகளுடன் கூறுக.

19. கூட்டு வினைகளை கட்டுரை வடிவில் விடையளிக்க.

20. வரலாற்று மொழியியல் விவரித்தெழுதுக.

---